# இனிய சிரிப்பினை இறுதிவரை காப்போம்



PD 1

## படத்தில் காணப்படும் குழுவின் மகிழ்ச்சிகரமான புன்னகைக்கு ஆரோக்கியமான பற்களும் முரசும் எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பின்வரும் காரணிகளை மூலமாகக் கொண்டு கலந்துரையாடவும்.

- பற்கள் அழகான தோற்றத்தின் ஒரு அங்கமாகும்

- ஆரோக்கியமான முரசு
  - அழகான புன்னகைக்கு
  - பயமின்றிப் பேசுவதற்கு (துர்நாற்றமின்றி)
  - கவரும் கம்பீரத்திற்கு
  - பல் என்புடன் உறுதியாக இருப்பதற்கு இது உதவும்

- ஆரோக்கியமற்ற முரசு
  - ஒழுங்கு வரிசையில் உள்ள பற்கள் அங்குமிங்கும் தள்ளப்பட்டு அவலட்சணமடையும்
  - பற்கள் காவி பிடித்திருப்பதனால் பற்கள் நிறம் மங்கும்
  - வயது முதிர்வடையும்போது பற்கள் ஆடி விழுவதற்கு வழிவகுக்கும்.

# முரசு நோய்களை அறிவோம்


## ஆரோக்கியமான முரசு



## நோயுற்ற முரசு



## பல்லின் குறுக்குவெட்டுமுகம்



# ஆரோக்கியமான முரசின் இயல்புகளையும் முரசு நோய்கள் பற்றிய பின்வரும் காரணிகளைக் கொண்டு கலந்துரையாடவும்

## ❑ நோயற்ற முரசின் இயல்புகள்

- ❖ முரசின் நிறம் - தோலின் நிறத்திற்கேற்றபடி வேறுபடக்கூடியது.
- ❖ முரசின் விளிம்பு - அரைவட்ட வடிவம் கொண்ட கூரிய விளிம்புகளைக் கொண்டது
- ❖ இயற்கையாகவே 2 மி.மீ. ஆழம்கொண்ட ஓர் கால்வாய் அமைப்பு பற்களைச் சுற்றிக் காணப்படல்

## ❑ முரசு நோய் (அழற்சி) என்றால் என்ன?

- ❖ பற்காவியிலுள்ள பக்றீரியா உற்பத்தியாக்கும் நச்சுப் பொருட்களை முரசிற்கும் அதைத் தாங்கும் இழையங்களுக்கும் ஏற்படும் பாதிப்பு

# ஏன் முரசு நோய் ஏற்படுகிறது?

காவி படிந்த முரசு



காவியற்ற முரசு



நிறந்தீட்டப்பட்ட காவி



# முரசு நோய்க்குப் பிரதான காரணம் பற்காவியே என்பதனை பின்வரும் காரணிகளைக் கொண்டு கலந்துரையாடவும்


- **பற்காவி என்றால்**
  - இளம் மஞ்சள் நிற ஒட்டும் தன்மையுள்ள அகற்றக்கூடிய பொருளாகும்
  - அதில் உமிழ்நீரிலுள்ள பக்றீரியாவும் உணவுத் துணிக்கைகளும் உண்டு
  - தினமும் பற்காவி கூடுதலாக முரசின் விளிம்புகளிலும் பற்களுக்கிடையிலுமே சேர்கிறது.
  - நன்றாகப் பல்துலக்கி வாயைச் சுத்தமாக்குவதுடன் பற்காவியை இல்லாதொழிப்பதுடன்
  - நிரந்தரமாக இவை படிவதால் தினமும் பல் துலக்க வேண்டும

- **முரசு நோயைப் பாதிக்கும் கவனத்தில்கொள்ள வேண்டிய வேறு காரணிகள்**
  - பற்காவியை அதிகரிக்கச் செய்யும் காரணிகள்
  - சீராக அமையாத பல்வரிசை
  - சரியாகப் பூர்த்தி செய்யப்படாத நிரப்பல்கள, Crowns & Bridges
  - வாயில் அணியும் உபகரணங்கள் (Dentures, Orthodontic appliances)
  - நோய் நிலைமைகள் (நீரிழிவு, லியூக்கேமியா, HIV/எயிட்ஸ்)
  - ஹோமோன் மாறுபாடுகள் (கர்ப்பம் தரித்திருத்தல்)

- **தீய பழக்கங்கள்**
  - புகைத்தல், வெற்றிலை உண்ணுதல்


# முரசு நோயின் ஆரம்ப நிலைகள்





முரசு அழற்சி ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம்





முரசு அழற்சி ஏற்பட்டு பற்காவி கடினமாகியிருக்கும் சந்தர்ப்பம்

# முரசு வியாதியின் ஆரம்ப நிலையும் அந்த நேரத்தில்எடுக்கவேண்டிய சிகிச்சையைக் குறித்ததுமான கலந்துரையாடல்


- **நோய் அறிகுறிகள்**

  முரசு


  - சிவந்திருக்கும்
  - வீங்கியிருக்கும்
  - விளிம்பின் முனைகள் மழுங்கியிருக்கும்
  - பல்துலக்கும்போது இரத்தம் வரும்
  - சில வேளைகளில் மட்டும் வலி ஏற்படும்

- இந்த வேளையில் பற்காவியை அகற்றுவதற்குச் சரியான முறையில் பல்துலக்குவதால் மட்டும் நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும்.
- பல்துலக்கும்போது முரசிலிருந்து இரத்தம் வரும் பகுதியை மிக நன்றாக துலக்கவும்
- இப்படிப் படியும் பற்காவி சில நாட்களின் பின் கல்சியம் சேர்வதன் மூலம் கடினமாக்கப்படும்
- இப்படிக் கடினமாக்கப்பட்ட பற்காவியை பற்தூரிகையால் அகற்ற முடியாது
- அவற்றை அகற்றுவதற்குப் பற்சிகிச்சை பெறுவதால் மட்டுமே முடியும்
- கடினமாக்கப்பட்ட பற்காவியை சுற்றி சரியான முறையில் பல் துலக்குவதன் மூலம்முரசு நல்ல நிலைமைக்குத் திரும்பும்

# முரசு நோய் தாக்கத்தின் பின்

பல்லின் வேர் வெளித்தெரியும் சந்தர்ப்பம்

முரசும் பல் எலும்புகளும் முறையே பாதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பம்

# முரசு வியாதியின் பின்னும் அந்த வேளையிலும் செய்ய வேண்டிய சிகிச்சை முறையைப் பற்றியும் உரையாடலில் ஈடுபடவும்ய

- நோய் அறிகுறிகள்
  - ❖ முரசின் விளிம்புகள் வட்டவடிவம் இல்லாமல் போய் முரசிலிருந்து இரத்தம் சீழ் வடிதல்
  - ❖ வேர் தெரிவதால் பற்கள் கூசி அதிக சந்தர்ப்பங்களில் வலி ஏற்படும்
  - ❖ இந்த சந்தர்ப்பங்களில் அநேகமாக கடினமாக்கப்பட்ட பற்காவி மஞ்சள், கபில, கறுப்பு நிறங்களில் காணக்கூடியதாக இருக்கும்.
- கடினமான பற்காவியை அகற்றி உரிய மற்றை சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் பின்பற்றுவதன் மூலம் நோய் மேலும் பரவாது தடுக்கலாம்
- அப்படிச் செய்யாவிடின் நோய் அதிகரிப்பதுடன் பல்வேர் வெளித்தள்ளப்பட்டு பல் ஆடத் தொடங்கும்
- இறுதியில் பல் விழும்
- வயது செல்லும்போது பல் விழுவது இந்த நோயாலே அன்றி வயது

# முரசு நோய்த் தடுப்புகள்








சரியான தூரிகை



பாவனைக்கு உகந்ததல்லாத பல்துலக்கும் தூரிகை







# முரசு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் முறைகள் பற்றிய குறிப்புகளை விளங்கப்படுத்தவும்

❏ சரியான முறையில் பல்துலக்குவதால் மட்டும் முரசு நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

❏ பல் துலக்கல்

❖ உணவு உட்கொண்ட பின

❖ குறைந்தது தினமும் இரண்டு தடவையாவது விசேடமாக இரவு நித்திரையின் முன

❖ கண்ணாடியின் முன்னின்று எல்லாப் பற்களின் எல்லாப் பக்கங்களையும் சுத்தப்படுத்துவதுடன் அவற்றைக் குறித்து அவதானத்துடன் பல் துலக்க வேண்டும்

❏ எதனால் - சரியான முறையில் பற்தூரிகையைப் பாவித்தல்(சிறிய தலை, மெதுமையான, நேரான தூரிகை)

❏ எதைப் பாவித்து - பற்பசையைப் பாவிக்கவும்(கரி, பற்பொடி, உப்புத் தூள், மணல் போன்றவை கூடாது)

❏ பல் துலக்கிய பின் பற்தூரிகையை நன்கு கழுவிய பின்வைக்க வேண்டும்

❏ பற்களின் (ஆழனநட) மற்றும் தூரிகையின் உதவியுடன் சரியானமுறையில் பல்துலக்குவதை விளக்கவும்

**பல்துலக்கிய பின் தூரிகையை வைக்கும் விதம்**

நன்றாகக் கழுவியபின்னர் தலைப்பகுதி மேலே உள்ளவாறு தாங்கியில் வையுங்கள்